

தைப்பூசத்தை முன்னிட்டு

# சென்னையில் வள்ளலார் வசித்த இல்லத்தில் சிறப்பு வழிபாடு: பி.கே. சேகர்பாபு பங்கேற்பு

## சன்மார்க்க கொடியை ஏற்றி வைத்து அன்னதானம் வழங்கினார்

சென்னை, பிப்.11–

**இன்று தைப்பூசத்தை முன்னிட்டு, சென்னை எழுகிணறு, வள்ளலார் வசித்த இல்லத்தில் சன்மார்க்க கொடியினை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஏற்றி வைத்து, அங்கு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் திருவருட்பா ஆறாம் திருமுறை பாராயணம் நிகழ்வில் கலந்து கொண்டு, அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.**

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது:–

தைப்பூசத்தை முன்னிட்டு, வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில் மூன்று நாட்களுக்கு தினமும் 10,000 சன்மார்க்க அன்பர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், வள்ளலார் அவதரித்த மருதூர் இல்லம் ஆகியவற்றை புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுபோன்று ஆன்றோர்கள் சான்றோர்களின் கொள்கைகளை, சமய நல்லிணக்கங்களை முன்னெடுத்து செல்வதால் தான் மதவெறி, இனவெறி போன்ற பாசிச சக்திகளுக்கு தமிழக மண்ணிலே இடமில்லை என்பதை நினைவூட்டுகின்ற, நிரூபிக்கின்ற வகையில் முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு இந்து சமய அறநிலையத்துறை விழா எடுத்து வருகிறது.

ஒரு பிரச்சனை வந்தவுடன் அதனை ஆய்வு செய்து, தவறு இருக்கும் பட்சத்தில் அதை சரி செய்கின்ற அரசுதான் இந்த அரசாகும். மதுரை தண்டாயுதபாணி திருக்கோயில் செயல் அலுவலர் தவறான உத்தரவு பிறப்பித்ததை அறிந்தவுடன், அது ஏற்புடையதாக இல்லை என்பதால் திரும்ப பெறப்பட்டு விட்டது. அவர் மீது விசாரணை மேற்கொள்ள நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. தவறு இருக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 200க்கும் மேல் வெற்றி உறுதி

மக்களின் அன்பை பெற்றவர்கள் மக்களோடு பயணிப்பவர்களுக்கு தேர்தல் வியூக மன்னர்களால் எவ்வளவு தூரம் பயன் இருக்கும் என்று தெரியவில்லை. எங்களைப் பொறுத்த அளவில் நாங்கள் மக்களிடம் கூட்டணியில் வைத்திருக்கின்றோம். ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் எதிர்த்து நின்ற அனைவருக்கும் ஜாமின் தொகையை இழந்தது ஒரு எடுத்துகாட்டாகும். இது ஒரு முன்னோட்டம், நிச்சயம் 2026 தேர்தலில் தமிழக முதலமைச்சர் எண்ணியது போல 200 தொகுதிகளை தாண்டி உறுதிமிக்க ஆட்சியாக மீண்டும் முதல்வர் ஸ்டாலின் இரண்டாவது முறையாக இந்த ஆட்சி பொறுப்பை ஏற்பார்.

கடந்த ஆட்சியின் 10 ஆண்டுகளில் பட்டா வழங்குதல் போன்ற முன்னெடுப்பான திட்டங்கள் எவையும் செயல்படுத்தப்படவில்லை. துணை முதலமைச்சர் சட்டமன்ற உறுப்பினர்களின் சீராய்வு கூட்டங்களை 6 முறை நடத்தி இருக்கின்றார். சென்னையில் திருவொற்றியூர், வேளச்சேரி, திருவள்ளூர் போன்ற இடங்களில் பட்டாக்கள் வழங்கும் முகாமை நடத்தினார்.

பழனி, திருச்செந்தூர் திருக்கோயிலில் தைப்பூசத்தை முன்னிட்டு சாமி தரிசனம் செய்பவர்கள் சமுதாயம் மற்றும் கட்சிகளை பயன்படுத்தக் கூடாது என்று அரசு தடை விதித்துள்ளது. அந்தந்த மாவட்ட கலெக்டரும், காவல் கண்காணிப்பாளரும் கடுமையான உத்தரவுகளை பிறப்பித்து இருக்கிறார்கள். என்னை பொறுத்த அளவில் ஆன்மீகமாக செல்பவர்கள் சாதி, சமயங்களுக்கு அப்பாற்பட்டு அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வோடு செல்வதுதான் ஏற்புடையது. ஆகவே பிளவுபடுத்துகின்ற சக்திகளுக்கு ஆன்மீக அன்பர்கள் செவி சாய்க்காமல் ஆன்மீக பூமி தமிழகம் என்று நிரூபிக்கின்ற வகையில் ஒற்றுமையோடு இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் வள்ளலார் வசித்த இல்லத்தின் பொறுப்பாளர் ஸ்ரீபதி, வள்ளலாரின் வழி தோன்றல் ஜோதி உமாபதி, சென்னை மண்டல இணை ஆணையர் ஜ.முல்லை, உதவி ஆணையர்கள் கே.சிவக்குமார், கி. பாரதிராஜா, நற்சோணை, அலுவலர்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்கள் கலந்து கொண்டனர்.

# வடலூரில் தைப்பூச ஜோதி தரிசனம்: பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பரவசம்

கடலூர், பிப். 11–

வடலூரில் தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா இன்று நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பரவசத்துடன், 7 திரைகளை நீக்கி ஜோதி தரிசனம் செய்தனர்.

கடலூர் மாவட்டம் வடலூரில் அருட்பிரகாச வள்ளலார் நிறுவின சத்திய ஞான சபையில் ஆண்டுதோறும் தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் இந்த ஆண்டு 154 வது ஜோதி தரிசன விழாவையொட்டி நேற்று சத்திய ஞான சபையில் அதிகாலை 5 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் பாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் சன்மார்க்கக் கொடியேற்றம் நடைபெற்றது.

முக்கிய விழாவான தைப்பூச ஜோதி தரிசன விழா இன்று சத்திய ஞான சபையில் நடைபெற்றது. கருப்பு திரை, நீலத்திரை, பச்சைத்திரை, செம்மை திரை, பொன்மை திரை, வெண்மை திரை, கலப்பு திரைகளை நீக்கி ஜோதி தரிசனம் காலை 6 மணிக்கு நிகழ்ந்தது. ஜோதி தரிசனம் காலை 10 மணி, நண்பகல் 1 மணி,



இரவு 7 மணி மற்றும் 10 மணிக்கும், நாளை காலை 5.30 மணி என 6 காலங்களில் 7 திரைகளை நீக்கி ஜோதி தரிசனம் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு 'அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெரும் கருணை' என்ற முழக்கத்துடன் ஜோதி தரிசனம் செய்தனர். தொடர்ந்து காலை 10 மணி முதல் ஜோதி தரிசனத்தையொட்டி வடலூரில் வெளிநாடு, வெளி மாநில, வெளி மாவட்ட மற்றும் உள்ளூர் மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்துள்ளதால், 1500க்கு மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். ஜோதி தரிசனத்தை முன்னிட்டு சிறப்பு ரெயில்கள், முக்கிய நகரங்களிலிருந்து சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது.

# போரூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பணியில் இல்லாததால் நடிகர் கஞ்சா கருப்பு திடீர் போராட்டம்

சென்னை, பிப். 11–

போரூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பணியில் இல்லாததால் நடிகர் கஞ்சா கருப்பு திடீர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

தமிழ் திரையுலகில் பிரபல நடிகர் கஞ்சா கருப்பு. நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடித்து புகழ்பெற்ற கஞ்சா கருப்பு சமீப காலங்களில் அதிக படங்களில் நடிக்காமல் இருந்து வருகிறார். சென்னை போரூரில் நகர்ப்புற சமுதாயம் நல மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது.

இந்த மருத்துவமனைக்குக் கால் வலி காரணமாக சிகிச்சைக்காக இன்று காலை 10 மணியளவில் நடிகர் கஞ்சா கருப்பு சென்றுள்ளார். அப்போது அங்கு பணியில் மருத்துவர்கள் இல்லை என அவர் குற்றம்சாட்டியுள்ளார். இதனால் மருத்துவமனை வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதற்கிடையே உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற மூதாட்டி ஒருவர் மருத்துவமனைக்கு வந்துள்ளார்.

அப்போது அங்கு பணியில் மருத்துவர்கள் இல்லாததால் மூதாட்டிக்கு முதல் உதவி சிகிச்சை அளிப்பதற்காக அவரை வேறு மருத்துவமனைக்குப் பொதுமக்கள் அனுப்பி வைத்தனர். காலை 7 மணி முதல் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததால் அதிருப்தி அடைந்த பொதுமக்கள், நடிகர் கஞ்சா கருப்புடன் இனைந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாகக் கஞ்சா கருப்பு வெளியிட்டுள்ள வீடியோவில், “அரசு மருத்துவர்கள் 2.5 லட்சம் ரூபாய் சம்பளத்தை வாங்கிக் கொண்டு மருத்துவர்கள் தனியாக கிளினிக் அமைத்துக் கொண்டு அங்குச் சிகிச்சை அளிக்கின்றனர். அதனால் மருத்துவர்கள்அரசுமருத்துவமனைக்கு வந்து மருத்துவமனையைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுகின்றனர்” எனக் கடுமையாகக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

# விழுப்புரம் அருகே சாலை விபத்து: திருநங்கை உள்பட 2 பேர் பலி

விழுப்புரம் பிப். 11–

விழுப்புரத்தில் நடந்த சாலை விபத்தில் திருநங்கை உள்பட இரண்டு பேர் பலி.

விழுப்புரம் அடுத்துள்ள அய்யன் கோவில் பட்டு கிராமத்தை சேர்ந்த திருநங்கை லட்சனா (வயது 25) மற்றும் கோனூர் கிராமத்தைச் சேர்ந்த முருகன் (வயது 50). இவர்கள் இருவரும் இரண்டு சக்கர வாகனத்தில் விழுப்புரம் புறவழிச் சாலை அருகே உள்ள விராட்டி குப்பம் பாதையில் சென்ற போது, அந்த வழியாக சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற வேன் இரண்டு சக்கர வாகனத்தின் மீது நேருக்கு நேர் மோதியது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே லட்சனா, முருகன் ஆகிய 2 பேரும் உயிரிழந்தனர்.

இதுகுறித்து விழுப்புரம் மேற்கு காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வீணாக பழி சுமத்தி களங்கம் ஏற்படுத்தும் முயற்சி நடக்காது

# தரமான வேட்டி, சேலைகள் உற்பத்தி: அண்ணாமலை புகாருக்கு அமைச்சர் காந்தி பதில்

சென்னை, பிப்.11–

**மக்களின் வரவேற்பையும், பாராட்டையும் பெற்று நல்லாட்சி நடத்தி வரும் தி.மு.க. அரசு மீது வீண்பழி சுமத்தி களங்கம் ஏற்படுத்தும் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் எண்ணம் எந்த நாளும் நிறைவேறாது என்று அமைச்சர் ஆர். காந்தி கூறியுள்ளார்.**

தமிழ்நாடு பாரதீய ஜனதா மாநில தலைவர் கே. அண்ணாமலை, வேட்டி சேலை வழங்கும் திட்டம் குறித்து நேற்று (10–ந் தேதி) வெளியிட்ட அறிக்கைக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி வெளியிட்டுள்ள மறுப்பறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படும் நூல் ரகங்கள், அரசு நூல் கிடங்குகளில் பெறப்பட்டு, நூல் மாதிரிகள் எடுக்கப்பட்டு, அவை சிட்ரா(SITRA)வின் விசைத்தறி சேவை மையம், டெக்ஸ்டைல் கமிட்டி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தரப்பரிசோதனை மையங்களில் தரப்பரிசோதனை செய்யப்பட்டு, தேர்வு பெற்ற நூல் மாதிரிகள் அடங்கிய லாட்டுகள் மட்டுமே, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, வேட்டி சேலைகள் உற்பத்திக்காக அனுப்பப்படுகிறது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நூல் பெறப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்ட பசை போடும் மற்றும் பாவு ஓட்டும் ஆலைகள் மூலமாக இந்நூல்களுக்கு பசை போட்டு பாவு ஓட்டி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உற்பத்திக்காக வழங்கப்படுகிறது.

சங்க உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்பட்டு சங்கத்தில் வரவு வைக்கப்பட்ட வேட்டி சேலைகள், கோஆப்டெக்ஸ், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலை கழகம் ஆகிய 3 கொள்முதல் முகமை கிடங்குகளில், 100% தர ஆய்வு செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் கூடிய வேட்டி சேலைகளை, மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டது. பொங்கல் 2025 திட்டத்திற்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் முகமை நிறுவனங்களில் கொள்முதல் செய்யப்பட்ட வேட்டி பண்டல்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் தரப்பரிசோதனையின் போது, பாலிகாட் பாவு நூலில் நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளைவிட பாலியஸ்டர் சதவீதம் அதிகமாக உள்ளதென கண்டறியப்பட்ட, சுமார் 13 லட்சம் வேட்டிகள் கொண்ட பண்டல்கள், சம்மந்தப்பட்ட கொள்முதல் முகமை நிறுவனங்களிலேயே நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிராகரிக்கப்பட்டுள்ள 13 லட்சம் வேட்டிகளுக்கு பதிலாக, நிர்ணயக்கப்பட்ட தர அளவீடுகளின்படியான வேட்டிகளை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செலவில் திருப்பி அளிக்க சம்மந்தப்பட்ட சரக கைத்தறி உதவி இயக்குநர்கள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்க செயலாட்சியர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஆண்டு பொங்கல் 2024 திட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட வேட்டிகளை தரப்பரிசோதனை செய்ததில் வேட்டிகளில் இருந்து மாதிரி எடுத்து அதில் உள்ள பாவு நூலின் பருத்தி தன்மையினை பரிசோதிக்க சிட்ரா விசைத்தறி சேவை மையத்திற்கு அனுப்பப்பட்டதில், வேட்டியில் 100% காட்டன் பாவு நூல் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொங்கல் 2024 தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களுக்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என நிரூபணமாகியுள்ளது.

### அதிகாரிகள் நியமனம்

முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அனைத்து தரப்பு மக்களின் நலனையும் உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு துறையிலும் சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, கைத்தறி தொழிலின் வளர்ச்சி மற்றும் நெசவாளர்களின் நலனுக்காக இவ்வரசு சீரிய முன்னெடுப்புகளை மேற்கொண்டு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தினை தொடர்ந்து பேணி பாதுகாத்து வருகிறது.

மேலும், அரசு அலுவலர்களின் பணியிடமாற்றமானது நிர்வாக காரணங்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் வழக்கமான நடைமுறை ஆகும். அதன்படி, 31.1.2025 தேதியிட்ட அரசாணையின்படி, 20க்கும் மேற்பட்ட இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டதில், கைத்தறி இயக்குநரின் பணியிட மாற்றமும் ஒன்றாகும். மாநிலத்தில் உள்ள, பல இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு பணியிட மாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில், கைத்தறி இயக்குநர் பணியிட மாற்றத்தை மட்டும் திரித்து, அரசியல் உள்நோக்கத்துடன் தமிழ்நாடு அரசின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை, முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

ஆதலால், உண்மைக்கு புறம்பான, அடிப்படை ஆதாரமற்ற, தேவையற்ற வதந்திகளை பரப்பும் நோக்கத்துடன், அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, அரசியல் ஆதாயத்திற்காக கண்ணியமற்ற முறையில் செய்திகளை வெளியிடுவது, மாநில அளவில் பொறுப்பில் உள்ள அரசியல் கட்சித் தலைவருக்கு உகந்ததல்ல. தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களின் பாதுகாப்பையும் நலனையும் உறுதி செய்யும் வகையில், சிறப்பாக செயல்பட்டு மக்களின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்று, நல்லாட்சி செய்து வரும் கழக அரசின் மீது, வீண் பழி சுமத்தி, களங்கம் ஏற்படுத்த பகல் கனவு காணும் எண்ணம், எந்நாளும் நிறைவேறாது என்பதை உறுதிபட தெளிவுபடுத்திக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஆர். காந்தி தெரிவித்துள்ளார்.

# பொன்னேரி வழக்கறிஞர்கள் சங்கத் தேர்தலில் தலைவர் உட்பட 10 பேர் பதவியேற்பு

பொன்னேரி, பிப்.11–

**திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் இயங்கி வரும் பொன்னேரி வழக்கறிஞர்கள் சங்க தேர்தலுக்கான புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. சங்கத் தலைவர், செயலாளர் உட்பட 10 பேர் பதவியேற்றனர்.**

தேர்தல் பொறுப்பாளர் மூத்த வழக்கறிஞர் ஐசக் சாமுவேல் தலைமையில் நடைபெற்ற இந்த தேர்தலில் பொன்னேரி வழக்கறிஞர்கள் சங்க தலைவராக வி.பார்த்தசாரதி, சங்க செயலாளராக பெரவள்ளூர் வ.செ.ராஜா, பொருளாளராக சே.ஜெயகாந்தன் மற்றும் வழக்கறிஞர்கள் துணைத்தலைவர்களாக எம்.தேவராஜ், ஏலியம்பேடு ப.மதன், இணை செயலாளர்களாக ஆர். சிலம்பரசன், கோ.ஜவஹர், விளையாட்டுத்துறை



செயலாளர்களாக எம்.சங்கர், கே.கவியரசன், நூலகராக ராம்கி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு பொன்னேரி வழக்கறிஞர்கள் சங்கத்தில் பதவி பிரமாணம் நடைபெற்றது. பின்னர் அனைவரும் குதிரை வண்டியின் மீதும் ஊர்வலமாகவும் பொன்னேரியில் உள்ள அண்ணல் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பின்பு பதவியேற்ற அனைவருக்கும் பல்வேறு தரப்பினர் வாழ்த்து தெரிவித்தனர்.


## ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB®

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**டிசம்பர் 31, 2023 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி விளைவு அறிக்கையின் சுருக்கம்**

₹ லட்சத்தில் (EPS தவிர)

| வ. எண். | விவரங்கள் | டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு | செப்டம்பர் 30, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு | டிசம்பர் 31, 2023 அன்று முடிவடைந்த காலாண்டு | டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த ஒன்பது மாதங்கள் | டிசம்பர் 31, 2023 அன்று முடிவடைந்த ஒன்பது மாதங்கள் | 31 டிசம்பர் 2024 அன்று நிறைவுற்ற ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | மொத்த செயல்பாடுகளின் மூலம் வருமானம் | 34,075 | 33,991 | 30,249 | 101,148 | 90,755 | 124,981 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம் (வரி, தனித்துவமான மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு முன்) | 5,452 | 5,883 | 5,111 | 17,319 | 16,004 | 21,996 |
| 3 | இக்காலத்திற்கான நிகர லாபம் (வரி, தனித்துவமான மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பின்) | 5,452 | 5,883 | 5,111 | 17,319 | 16,004 | 21,996 |
| 4 | வரி போக இக்காலத்திற்கான நிகர லாபம் (தனித்துவமான மற்றும் / அல்லது அசாதாரண இனங்களுக்கு பின்) | 4,038 | 4,316 | 3,795 | 12,799 | 11,873 | 16,298 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் இந்தக் காலகட்டத்திற்கான லாபம் (வரிக்குப் பிறகு) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உட்பட | 4,038 | 4,316 | 3,795 | 12,799 | 11,873 | 16,298 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 | 1,539 |
| 7 | மற்ற மூலதனம் | | | | | | 29,067 |
| 7 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | | |
| | - அடிப்படை | 26.24 | 28.04 | 24.66 | 83.16 | 77.15 | 105.90 |
| | - குறைமதிப்பு | 26.24 | 28.04 | 24.66 | 83.16 | 77.15 | 105.90 |

குறிப்பு :

மேற்குறிப்பிட்டவைகள் 2015-ஆம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின்கீழ் பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாகும். இது நிறுவனத்தின் வலைத்தளமான www.esabindia.com மற்றும் பங்குச் சந்தைகளின் வலைத்தளங்களான BSE limited and National Stock Exchange of India Limited ஆகியவற்றிலும் கிடைக்கும்.

சென்னை
பிப்ரவரி 11,2025

“Shaping the world we imagine”
எமது வலைதளத்தைப் பார்க்கவும்: http://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோகித் கம்பீர்
மேலாண்மை இயக்குநர்